**தலைப்பு 303 – நெசவுக் கைத்தொழில் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 அபிப்பிராயம்**

---

நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 ஜூன் 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஜூலை 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன்,

அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளது.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி இலக்கம் 01/2020 இல் பந்தி 11.1 | பண்டக் கணிப்பீடு தொடர்பாக பொது 47 அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள் தொடர்பாக அலுவல்கள் மேற்கொள்ளல் அடுத்த நிதியாண்டு ஏப்ரல் 30 திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்கான இனங் காணப்பட்ட பண்டங்கள் அப்புறப்படுத்துவதற்காக 2022 ஏப்ரல் 30 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் குறிப்பிட்ட வருடத்திலேயே பண்டக் கணிப்பீட்டுத் தீர்மானங்களின் படி செயற்பட வேண்டும் என உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்படல் மேற்கொள்ளப்பட்டது என. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 04/2018 | நிறுவனத்தின் அனைத்து நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக சரியான தகவல்கள் கொம்ட்ரோளர் ஜெனராலிற்கு அறிவிக்க வேண்டியிருந்த போதிலும் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்கு சொந்தமான காணி மற்றும் 06 கட்டிடங்களின் பெறுமதியாகிய ரூபா 227,537,975 தொகை மாத்திரம் அவ்வாறு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், மீதியான 12 கட்டிடங்கள் மற்றும் அதற்குரிய காணிகளின் | அறிவித்திருக்காத 12 கட்டிடங்கள் மற்றும் அதற்குரிய காணிகளின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்த பின்னர் கொம்ட்ரோளர் ஜெனராலுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க நிறுவனத்தில் அனைத்து நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக சரியான தகவல்கள் கொம்ட்ரோளர் ஜெனரலிற்கு அறிவிக்க வேண்டும். |

பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கொம்ட்ரோளர் ஜெனரால் அலுவலகத்திற்கு அறிவித்திருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நெசவுக் கைத்தொழில் கைத்தறிகளுக்காக நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் புத்தாக்க செயற்திட்டத்தின் கீழ், கட்டுபெத்த நெசவுப் பாடசாலை கைத்தறிகைள அரசாங்க தொழிற்சாலையின் மேற்பார்வையின் கீழ் நவீனமயப் படுத்துவதற்காக ரூபா 7 மில்லியன் தொகை வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னேற்ற அறிக்கையின் படி, அதற்காக ரூபா 185,137 தொகை செலவிடப்பட்டு ஒரு இயந்திரம் மாத்திரம் நவீனமயப்படுத்தப்பட்டிருந்தது. | புத்தாக்க நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கைத்தறிகளை நவீனமயப்படுத்தல் தன்னியக்கமாக செயற்படக் கூடிய வோபின் செட், இலக்ரோனிக் வயின்டின் மெஷின், IDB மூலம் கண்டு பிடிக்கப்பட்ட இயந்திரத்தை துறைக்கு அறிமுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் இதன் கீழ் புதிதாக ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. கொவிட் மற்றும் நாட்டை தனிமைப்படுத்தும் நிலைமையின் மீது குறிப்பிட்ட நிறுவனங்கள் மற்றும் நபர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் தொடர்நடவடிக்கை தொடர்ந்து செயற்படுத்துதல் செயலிழந்திருந்தது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி குறிப்பிட்ட செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன் மூலம் கைத்தறி நெசவுத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக 10 நெசவுத் தொழில் கிராமங்கள் நிறுவுவதற்காக அதனை அண்டிய விண்ணப்பதாரிகள் 150 பேரிற்கு பயிற்சி வழங்கி தேவையான உபகரணங்கள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.<br>அவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 05 கிராமங்களை அண்டிய விண்ணப்பதாரிகள் 73 பேரிற்கு பயற்சி வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 24,676,250 தொகை பெறுமதியான கைத்தறிகளுக்குரிய உபகரணங்கள் 2022 ஏப்ரல் 30 திகதி அளவிலும் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | 2021 ஆண்டின் போது 10 செயற்திட்டங்கள் ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நிலவிய கொவிட் தொற்றுநோயின் மூன்றாவது பரவலின் காரணமாக எதிர்பார்த்த செயற்திட்டங்கள் அனைத்தையும் ஆரம்பிக்க முடியாதிருந்ததுடன், குறிப்பிட்ட சிலருக்கு பயிற்சி வழங்கல் நடைபெற்றது.<br>2020 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் முடிவடைந்த பின்னர் குறிப்பிட்ட உபகரணங்கள் செயற்திட்டங்களுக்கு விநியோகிக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்படும் எனவும், மீதியான கைத்தறிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்காக மீண்டும் கொள்வனவு செய்யாமல் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன் மூலம் கைத்தறி நெசவுத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் உரிய முறையில் செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முழுமையான வேலைவாய்ப்பு மூலம் மொத்த தேசிய உற்பத்திக்கு வழங்கும் பங்களிப்பை அதிகரிப்பதற்காக தொழில் தகைமையுடைய தொழிலாளர் தொகுதி அணியொன்றை உருவாக்கும் திணைக்களத்தின் தேசிய பணியாக இருந்த போதிலும், நெசவுப் பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் ஆறு மாத கால ஆரம்ப பாடநெறிகள், நெசவுக் கைத்தொழில் இறுதி சான்றிதழ் பாடநெறி மற்றும் கைத்தறி கைத்தொழில் உயர் அலங்கார வேலைப்பாட்டு பயற்சிப் பாடநெறிகளுக்காக தொழில் ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட (NVQ) கட்டம் 4 வரை அபிவிருத்தி செய்தல் மீளாய்வாண்டின் போதும் நடைபெற்றிருக்கவில்லை. | கைத்தறி நெசவுத் தொழில் துறைக்குரிய பயிற்சி வழங்கல் மேற்கொள்வதற்காக தொழில் தகைமை வழங்கும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதுடன், வருடாந்தம் வரக்கூடிய மாணவர்களை மதிப்பாய்வு அலுவல்களுக்காக தொடர்புபடுத்தல் மேற்கொள்ளப்படுவதுடன், அந்த தகைமைகளை வழங்கும் வேலைத்திட்டம் இடையறாது நடைபெறுகின்றது என. | நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் இந்த பாடநெறிக்காக தொழில் ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட (NVQ) கட்டம் 4 வரை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவ பலவீனங்கள்**

-------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | வெளித்தரப்பினருக்கு குத்தகைக்கு கொடுத்திருந்த திணைக்களத்திற்கு சொந்தமான மின்தறி நெசவுக் கைத்தொழில் நிலையங்களில் 04 நிறுவனங்கள் குத்தகை உடன்படிக்கையை மீறி 03 வருடங்களுக்கும் 22 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பணம் ஏதும் செலுத்தியிருக்காததுடன், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த குத்தகைகாரரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த குத்தகைத் தொகை ரூபா 13,868,250 தொகையாக காணப்பட்டது. அதில் ஒரு குத்தகையாளர் குத்தகை ஆதனத்தை பிணையாக வைத்து கடன் தொகையொன்றும் பெற்றிருந்ததுடன், ரூபா 8,910,000 இற்கான குத்தகை செலுத்துவதை புறக்கணித்திருந்தார். மேலும், குத்தகை ஆதனம் ஒன்றிலிருந்து | நிலுவை குத்தகையை அறவீடு செய்வது தொடர்பாக சட்ட ஆலோசனை பெறுவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அத்துடன் குறிப்பிட்ட ஆலோசனையின் படி நிறுவனத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிலுவை குத்தகையை அறவீடு செய்வதற்கு உரிய அலுவல்களின் முன்னேற்றம் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 2,756,000 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், தற்போது அங்கீகாரம் இன்றி ஒருவர் குடியிருக்கிறார். ஒரு நிறுவனத்தில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவைக் குத்தகை ரூபா 521,000 தொகை தொடர்பாக நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. அதன்படி, நிலுவைக் குத்தகை அறவீடு செய்தல் தொடர்பாக நடவடிக்கைகளை விரைவாக எடுக்கப்பட படுத்த வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | | |
| (ஆ) | நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் என திணைக்களத்தினால் பயன்படுத்தப்படும் 05 கட்டிடங்களை கொண்ட 03 காணிப் பகுதிகளின் உரிமையை சரியாக இனங் காண்டிருக்காமையால் அதனை தீர்த்துக்கொள்வதற்காக குறிப்பிட்ட பிரதேச செயலகங்களுக்கு மற்றும் மாவட்ட காணி மறுசீரமைப்பு அதிகார பீடத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ள போதிலும், அதன் பின்னர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களை தீர்ப்பதற்காக குறிப்பிட்ட பிரிவிற்கு அறிவுருத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பதில் கிடைத்த பின்னர் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு அறிவுருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | காணிகளின் உரிமையை சரியாக இனங் கண்டு கட்டிட நிர்மாண வேலை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | உரிமையை சரியாக இனங் கண்டிருக்காத 2 கட்டிடங்கள் மற்றும் காவல் குடிலுடனான ராஜகிரியவில் அமைந்துள்ள 30 பர்சஸ் காணியில் அமைந்துள்ள இயற்கை நிறமூட்டும் நிலையத்தில் பாடநெறிகள் நடாத்துவதற்கு போதியளவு மாணவர்கள் இன்மையால் 2021 ஆண்டின் ஜனவரி முதல் கொவிட் நிலையமொன்றாக பயன்படுத்துவதற்கு தற்காலிமாக அரச நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், அந்தக் கட்டிடம் தற்போது குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தப்படாமையால் அதனை மீண்டும் பெற்று ஆக்கபூர்வமாகப்ன பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பாடநெறிகள் நடாத்துவதற்காக போதியளவு மாணவர்கள் இன்மை காணப்பட்டதுடன், கொவிட் 19 தொற்றுநோய் காலத்தில் தனிமைப்படுத்தல் நிலையமொன்றாக நடாத்திச் செல்வதற்கு வெலிகட பொலிஸ் நிலையத்தினால் வேண்டப்பட்டவாறு பொலிஸ் நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. | அந்தக் கட்டிடம் குறிப்பிட்ட கருமத்திற்காக தற்போது பயன்படுத்தப்படாமையால் அதனை திருப்பப் பெற்று அதனை ஆக்கபூர்வமாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் இனங் கண்டிருந்த அபிவிருத்திச் செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது ஏற்பட்டிருந்த தாமதம், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை சாதிக்கக்கூடிய மட்டம் தொடர்பாக பிரதிகூலமாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அதேபோல் அந்த குறிக்கோள்களை நெருங்குவதன் முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்காக அடிப்படை ஆண்டொன்று மற்றும் அந்த ஆண்டில் காணப்பட்ட அடிப்படை தரவுகள் என இனங் கண்டிருக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது பெற்றிருந்த முன்னேற்றம் 0 சதவீதத்திற்கும் 49 தசவீதத்திற்கும் இடைப்பட்டதென வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் காட்டப்பட்டிருந்தது. அதன்படி அந்த முன்னேற்றம் பெறுமதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. | நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை மீது திட்டமிடப்பட்டிருந்த அனேகமான செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை. இந்த நிலைமை மீது 2021 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை மீது வருடாந்த செயலாற்றுகையின் வீதாசாரத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி செயற்திட்டத்தை செயற்படுத்த வேண்டியதுடன், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்கும் முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக அடிப்படை ஆண்டொன்று மற்றும் அந்த ஆண்டில் காணப்பட்ட நிலைமையை அடிப்படைத் தரவுகள் என இனங் கண்டிருக்க வேண்டும். |
| (ஆ) | 2018 ஏப்ரல் 27 திகதிய இலக்கம் MSDW/08/65 கொண்ட நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு இணங்க நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் தேசிய மட்டத்தில் திட்டமுறைமை சார் முகாமைத்துவ திட்டத்தின் படி நிறுவன ரீதியாக, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் நெருங்குவதற்காக ஒன்றிணைக்கக் கூடிய சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இருவர் நியமனம் செய்திருக்கவில்லை. | குறிப்பிட்ட தெரிவுகள் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு பொருத்தமாக இருக்க வேண்டும். |

**5 நல்லாளுகை**

**5.1 பொது மக்களுக்கு சேவையாற்றுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 பெப்ரவரி 06 திகதிய 05/2008 மற்றும் 05/2008(i) இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனம் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்துதல் மற்றும் குறிப்பிட்ட அலுவல்களை மதிப்பாய்வு செய்வதற்காக திணைக்களத்தினால் செய்முறை ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அதனை செயற்படுத்தியிருக்கவில்லை. | நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை மத்தியில் பிரஜைகள் / சேவை பெறுனர் சாசனம் தயாரிக்கும் அலுவல்கள் எதிர்பார்த்தவாறு பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போன போதிலும், தற்போது அந்த அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க திணைக்களத்தினால் செய்முறை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும். அவ்வாறின்றேல், அதிகாரச் சட்டத்தின் 40(2) படி அதிகாரச் சட்டம் செயற்படுத்தப்பட்ட நாள் முதல் 2 வருடங்களுக்குள் அந்தப் பதவிக்காக நியமனங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்காமையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர் ஒருவரை பெற்றுத்தரும் படி பொது நிருவாக, மகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் வேண்டப்பட்டது. மேலும், அந்தப் பதவிக்காக பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யும் வரை கடமைகளை அணவல் செய்வதற்காக பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சுச் செயலாளரிடம் கேட்டுள்ளேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) படி உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும். |